ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ துப்புடையாரை ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ துப்புடையாரை ॥

## அரவணைப் பள்ளிகொள் அரங்கனைப் போற்றல்

‡துப்புடையாரை அடைவதெல்லாம்⋆
சோர் விடத்துத் துணை ஆவர் என்றே⋆
ஒப்பிலேன் ஆகிலும் நின் அடைந்தேன்⋆
ஆனைக்கு நீ அருள் செய்தமையால்⋆
எய்ப்பென்னை வந்து நலியும்போது⋆ அங்கு
ஏதும் நான் உன்னை நினைக்க மாட்டேன்⋆
அப்போதைக்கிப்போதே சொல்லிவைத்தேன்⋆
அரங்கத்தரவணைப் பள்ளியானே! (1)

சாம் இடத்தென்னைக் குறிக்கொள் கண்டாய்⋆
சங்கொடு சக்கரம் ஏந்தினானே!
நா மடித்தென்னை அநேக தண்டம்⋆
செய்வதா நிற்பர் நமன் தமர்கள்
போம் இடத்துந்திறத்தெத்தனையும்⋆
புகாவண்ணம் நிற்பதோர் மாயை வல்லை
ஆம் இடத்தே உன்னைச் சொல்லி வைத்தேன்⋆
அரங்கத்தரவணைப் பள்ளியானே! (2)

எல்லையில் வாசல் குறுகச் சென்றால்⋆
எற்றி நமன் தமர் பற்றும்போது
நில்லுமின் என்னும் உபாயம் இல்லை⋆
நேமியும் சங்கமும் ஏந்தினானே!
சொல்லலாம் போதே உன் நாமம் எல்லாம்⋆
சொல்லினேன் என்னைக் குறிக்கொண்டென்றும்
அல்லல் படாவண்ணம் காக்க வேண்டும்⋆
அரங்கத்தரவணைப் பள்ளியானே! (3)

ஒற்றை விடையனும் நான்முகனும்⋆
    உன்னை அறியாப் பெருமையோனே!
முற்றுலகெல்லாம் நீயே ஆகி⋆
    மூன்றெழுத்தாய முதல்வனே ஓ!
அற்றது வாழ்நாள் இவற்கென்றெண்ணி⋆
    அஞ்ச நமன் தமர் பற்றல் உற்ற
அற்றைக்கு நீ என்னைக் காக்க வேண்டும்⋆
    அரங்கத்தரவணைப் பள்ளியானே! (4)

பை அரவின் அணைப் பாற்கடலுள்⋆
    பள்ளி கொள்கின்ற பரம மூர்த்தி!
உய்ய உலகு படைக்க வேண்டி⋆
    உந்தியில் தோற்றினாய் நான்முகனை
வைய மனிசரைப் பொய் என்றெண்ணிக்⋆
    காலனையும் உடனே படைத்தாய்
ஐய! இனி என்னைக் காக்க வேண்டும்⋆
    அரங்கத்தரவணைப் பள்ளியானே! (5)

தண்ணெனவில்லை நமன் தமர்கள்⋆
    சாலக் கொடுமைகள் செய்யா நிற்பர்
மண்ணொடு நீரும் எரியும் காலும்⋆
    மற்றும் ஆகாசமும் ஆகி நின்றாய்!
எண்ணலாம் போதே உன் நாமம் எல்லாம்⋆
    எண்ணினேன் என்னைக் குறிக் கொண்டென்று
அண்ணலே! நீ என்னைக் காக்க வேண்டும்⋆
    அரங்கத்தரவணைப் பள்ளியானே! (6)

செஞ்சொல் மறைப்பொருள் ஆகி நின்ற⋆
    தேவர்கள் நாயகனே! எம்மானே!
எஞ்சலில் என்னுடை இன் அமுதே!⋆
    ஏழ் உலகும் உடையாய்! என் அப்பா!
வஞ்ச உருவின் நமன் தமர்கள்⋆
    வலிந்து நலிந்தென்னைப் பற்றும்போது

அஞ்சலை என்றென்னைக் காக்க வேண்டும்⋆
    அரங்கத்தரவணைப் பள்ளியானே! (7)

நான் ஏதும் உன் மாயம் ஒன்றறியேன்⋆
    நமன் தமர் பற்றி நலிந்திட்டிந்த
ஊனே புகேயென்று மோதும்போது⋆ அங்-
    கேதும் நான் உன்னை நினைக்க மாட்டேன்
வானேய வானவர் தங்கள் ஈசா!⋆
    மதுரைப் பிறந்த மா மாயனே!⋆ என்
ஆனாய்! நீ என்னைக் காக்க வேண்டும்⋆
    அரங்கத்தரவணைப் பள்ளியானே! (8)

குன்றெடுத்தாநிரை காத்த ஆயா!⋆
    கோநிரை மேய்த்தவனே! எம்மானே!⋆
அன்று முதல் இன்றறுதியா⋆
    ஆதியஞ்சோதி மறந்தறியேன்⋆
நன்றும் கொடிய நமன் தமர்கள்⋆
    நலிந்து வலிந்தென்னைப் பற்றும்போது⋆
அன்றங்கு நீ என்னைக் காக்க வேண்டும்⋆
    அரங்கத்தரவணைப் பள்ளியானே! (9)

‡மாயவனை மதுசூதனன் தன்னை⋆
    மாதவனை மறையோர்கள் ஏத்தும்⋆
ஆயர்கள் ஏற்றினை அச்சுதன் தன்னை⋆
    அரங்கத்தரவணைப் பள்ளியானை⋆
வேயர் புகழ் வில்லிபுத்தூர் மன்⋆
    விட்டுசித்தன் சொன்ன மாலை பத்தும்⋆
தூய மனத்தனர் ஆகி வல்லார்⋆
    தூ மணிவண்ணனுக்காளர் தாமே (10)

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥